தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2015**

**A011** காப்பிய இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. தமிழில் இதிகாசக் காப்பியங்கள் எவை?
2. கிறித்தவக் காப்பியங்களில் குறிப்பிடத்தக்கவை எவை?
3. சிலப்பதிகாரம் எத்தனை காதைகளை உடையது?
4. காப்பியக் கட்டமைப்பு எத்தனை வகைப்படும்?
5. மணிமேகலை காப்பியத்தில் தெய்வீக பாத்திரங்கள் எவை?
6. குண்டலகேசியின் ஆசிரியர் யார்?
7. சூதாட்டத்தால் கிடைத்த பொருளைக் கொண்டு சிவன் அடியாரை வழிபட்டவர் யார்?
8. இங்கிலாந்தில் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் இருவரைக் குறிப்பிடுக.
9. வில்லிபாரதத்தின் முதல் நூல் எது?
10. பழைய ஏற்பாட்டினைத் தழுவி உள்ள கிறித்தவக் காப்பியம் எது?
11. உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல்கள் யாவர்?
12. குத்பு நாயகம் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
13. சுத்தானந்தப் பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?
14. மணிமேகலையின் நகலாக உள்ள காப்பியம் எது?
15. யாரது கட்டளைப்படி இராமன் வில்லை ஒடித்தான்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. மேலை இலக்கியக் காப்பிய வகைகளைக் கூறுக.
2. சீவக சிந்தாமணியில் இடம்பெறும் கட்டிட சிற்பக் கலைகள் குறித்தெழுதுக.
3. ஐஞ்சிறு காப்பியங்களைக் கூறுக.
4. மெய்ப்பொருள் நாயனார் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. மெய்ப்பாடுகள் எத்தனை வகைப்படும்? அவையாவை?
6. இயேசு காவியத்தில் கண்ணதாசனின் உவமைத்திறன் குறித்தெழுதுக.
7. இசுலாமியக் கடமைகள் குறித்தெழுதுக.
8. புலவர் குழந்தையின் படைப்புகளைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஐம்பெருங்காப்பியங்களுள் இரட்டைக் காப்பியங்கள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டுள்ள சமூகச் சிந்தனைகளை வரையறை செய்க.

2. (அ) பெரிய புராணத்தின் இலக்கியச் சுவையைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணத்தின் கதைச் சுருக்கத்தினை எழுதுக.

3. (அ) தேம்பாவணி காப்பியத்தின் மூவர் பெருமைகளை தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்களின் போக்கினை எழுதுக.

***